இனி இது ரகசியம் அல்ல!

நாடு கொரோனாவால் அல்லோலகல்லோலப்படுகின்றது. ஆனால் அரசோ கொரோனா ஒருபுறமிருக்க மறுபுறம் தனது கைவரியைக் காட்டும் வேலையைக் கனகச்சிதமாக முன்னெடுக்கின்றது.

இது நீதித்துறை தொடர்பாக அரசின் கைவரிசை பக்கம் 02

பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 05 சனிக்கிழமை 18.04.2020 கதிர் 164

## வடக்கில் 50 பேரிடம் பி.சி.ஆர். சோதனை

### ஒருவருக்கும் தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.18

வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம் 50 பேரிடம் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தி பக்கம் 02

## 244 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப்.18

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் இருவர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனடிப் பக்கம் 02

## கொட்டாஞ்சேனை பெண்ணின் 2 ஆவது மகனுக்கும் கொரோனா!

கொழும்பு, ஏப். 18

கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவின் பண்டாரநாயக்க மாவத்தையில் அடையாளம் காணப்பட்ட 59 வயதான கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணின் 2 ஆவது மகனுக்கும் கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று இரவு 9.00 மணி வரையிலான காலப் பகுதியில் இலங்கையில் புதிதாக 4 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் 3 பெண்கள் உள்ளனர். பக்கம் 02

# அரசியல் நெருக்கடியைத் தீர்க்க ஒரு நிலைப்பாட்டுக்கு வாருங்கள்

## அரசுக்கும் எதிரணிக்கும் சபாநாயகர் அழைப்பு



கொழும்பு, ஏப்ரல்.18

தற்போதைய கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மேலதிகமாக நாடு தேவையற்ற அரசமைப்புப் பிரச்சினையொன்றை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்காக, அரசியல் முரண்பாடுளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, பொதுத்தேர்தலை நடத்துவது குறித்து ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வருவதற்கு அரசும் எதிர்க்கட்சிகளும் தேர்தல் ஆணைக்குழுவுடன் துரிதமாகவும், பரஸ்பர நம்பிக்கையுடனும் கலந்துரையாடல்களை நடத்த முன்வரவேண்டும்.

– இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் சபாநாயகர் கரு ஜயசூரிய. பக்கம் 02

## ஒரு மாதத்தில் 62,000 பேர் சுய தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, ஏப். 18

கொரோனா வைரஸ் தொற்று பரவலிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்குடன் கடந்த மார்ச் 17 ஆம் திகதி, பொலிஸாரின் நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பிக்கப்பட்ட சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் இதுவரை 62 ஆயிரம் பேர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ஜாலிய சேனாரத்ன கூறினார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று ஊடகவியலாளர்களைத் தெளிவு பக்கம் 02

## 30,631 பேர் கைது!

ஊரடங்குச் சட்டத்தை மீறிய 343 பேர் நேற்று காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்களிமிருந்து 102 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் நேற்று நண்பகல் 12 மணி வரையான காலப் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 30 ஆயிரத்து 631 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 7 ஆயிரத்து 892 வாகனங்களுக் கும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## நெடுந்தீவைச் சேர்ந்த சகோதரர்கள் லண்டனில் கொரோனாவுக்குப் பலி

### இருநாள் இடைவெளியில் சோகச் சம்பவம்





பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வசிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த அண்ணனும் தம்பியும்

கொரோனா தொற்றிற்கு இலக்காகி அடுத்தடுத்து இருநாள் இடைவெளியில் உயிரிழந்துள்ளமை பக்கம் 02

## மருந்துப் பொருள்களுடன் வந்திறங்கிய சீன விமானம்




கொழும்பு, ஏப். 18

இலங்கைக்கு வழங்குவதற்காக சீனாவிலிருந்து 16 தொன் மருந்துப் பொருள்களுடன் விமானம் ஒன்று நேற்றிரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

தற்போது பக்கம் 02

## ஊரடங்கு நீக்கப்படும்போது கிளினிக்குகள் மீள ஆரம்பம்

கொழும்பு, ஏப்.18

கடுமையான கட்டுப்பாடுகளின் கீழ் ஊரடங்கு உத்தரவு நீக்கப்படும்போது கொரோனா வைரஸ் காரணமாக நிறுத்தப்பட்ட மருத்துவ பக்கம் 02

## அபாயம் நீங்கும்வரை தேர்தலை நடத்தாதீர்!

### முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, ஏப்.1

இலங்கையில் கொரோனா தொற்று முற்றாக நீங்கும் வரை பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்க வேண்டாம் என்று ஸ்ரீலங்கா பக்கம் 02

## கொரோனாவால் சில பகுதிகள் தொடர் முடக்கம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பல்வேறு பகுதிகள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய பகிர்வு.

பிணை முறி விவகார சிக்கல் வெடித்த காலத்தில் நிதி அமைச்சராக இருந்தவர் ஐ.தே.க. உபதலைவர் ரவி கருணாநாயக்கா.

புதிய தரப்பு ஆட்சிப் பீடத்துக்கு வந்த கையோடு ரவி கருணாநாயக்காவை நீதிமன்ற உத்தரவு பெற்றுக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தமையும் –

அதற்கமைய நீதிவான் நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொண்ட பொலிஸார் ரவி கருணாநாயக்காவைத் தேடித் திரிந்தமையும் –

ரவி கருணாநாயக்கா கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சான்றாணை மனுத் தாக்கல் செய்தமையும் –

அதை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் ரவி கருணாநாயக்காவை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் பிரசன்னமாகிப் பதிவைச் செய்யும்படி உத்தரவிட்டமையும் –

வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுப்படி, ரவி உடனடியாகவே, முன்னர் தம்மைக் கைது செய்ய உத்தரவு வழங்கிய நீதிவான் நீதிமன்றில் பிரசன்னமாகி தமது சமுகத்தைப் பதிந்து கொண்டார்.

இனி, அவர் தொடுத்த சான்றாணை மனு மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒரு முடிவை எடுக்கும் வரை இருந்த விடயத்துக்காக அவர் மீது அரசு 'கை' வைக்க முடியாது. அதுதான் நிலைமை.

இந்த நிலையில் –

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக முழு இலங்கையையுமே ஊரடங்கில் மூழ்கி இருக்க –

ஏனைய துறையோடு நீதித்துறையும் ஸ்தம்பித்து, வழக்குகள் எல்லாம், நீதிமன்றங்கள் கூடாமலும், வழக்காளிகள் வராத நிலையிலும் தன்பாட்டில் தவணை போய்க்கொண்டிருக்க –

சட்ட மா அதிபர் மட்டும் ஊரடங்குக்கு மத்தியில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு நகர்த்தல் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருக்கின்றார்.

ரவி கருணாநாயக்கவின் சான்றாணை மனுவை உடனடியாக – இந்த ஊரடங்குக்கு மத்தியிலும் – விசாரணைக்கு எடுக்கும்படி அந்த விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இந்த நகர்த்தல் விண்ணப்பம் சட்டமா அதிபரினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

ரவி கருணாநாயக்காவை உள்ளே தள்ளுவதில் அவ்வளவு அவசரம் போலும் அதிகாரத் தரப்புக்கு. அதனால்தான் ஊரடங்குக்கு மத்தியிலும் இந்த வழக்கை மட்டும் அவசர அவசரமாக விசாரிக்க வேண்டும் என்று துடிக்கின்றார் சட்ட மா அதிபர்.

இந்த நகர்த்தல் விண்ணபத்தை நீதிமன்றத்தைக் கூட்டிப் பரிசீலிப்பதா, அதற்கான அவசரமும், அவசியமும் எழுந்துள்ளதா என்பவை குறித்தெல்லாம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் பெரும்பாலும் திங்களன்று தீர்மானிப்பார் எனத் தெரிகின்றது.

★ ★ ★

இதேசமயம், பிரகாசித்து வந்த இளம் முஸ்லிம் சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் விவகாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்பது தெரிந்ததே.

தற்கொலைக் குண்டுத்தாரிகளில் ஒரு வர்த்தகக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களும் அடங்குவர். அந்த வர்த்தகக் குடும்பத்தின் சட்டரீதியான பணிகளைக் கையாளும் சட்டத்தரணி இந்த ஹிஸ்புல்லா.

ஆனாலும், அரசுக்குத் தலையிடி தரும் விதத்தில் மனித உரிமைகள் விடயத்தில் குரல் எழுப்புவர்.

அவரின் கைதுக்கு எதிராக அவரின் தந்தையாரும், சகோதரரும் தனித்தனியாக இரண்டு ஆள்கொணர்வு மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா மூலம் இந்த ஆள்கொணர்வு மனுக்கள் நேற்றுத் தாக்கலாகின. பெரும்பாலும் செவ்வாய்க்கிழமையன்று நீதிமன்றம் கூடி இந்த மனுவை பரிசீலனைக்கு எடுப்பதா என்பது குறித்துத் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த மனுக்களில் கூறப்பட்ட தகவலன்படி –

கடந்த திங்களன்று ஹியாஸின் கைத் தொலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. அன்று ஒரு குறிப்பிட்ட வங்கியின் ஏ.ரி.எம். கருவியில் பணம் எடுக்கீர்களா என்று கேட்டார்கள். அவர் ஆம் என்று பதிலளித்தார்.

*"அப்படியா நல்லது நாங்கள் சுகாதார அமைச்சைச் சேர்ந்தோர் பேசுகின்றோம். உங்களை நாங்கள் அவசரமாக நேரில் சந்திக்க வேண்டும். மாலை நான்கு மணிக்கு வருகின்றோம். வீட்டில் இருங்கள்."*
– என்று கூறினார்களாம்.

தற்போதைய கொரோனாப் பிரச்சினையின் பின்னணியில் இந்த விவரத்தைப் புரிந்து கொள்ள முற்பட்ட ஹிஜாஸ், அவர்களுக்காகக் காத்திருந்தார். திடீரென ஓர் அணி வீட்டுக்குள் நுழைந்தது. ஹிஜாஸைவ் அவரது வீட்டுக்குள்ளேயே கையில் விலங்கிட்டு இருக்கைக் கதிரையுடன் பிணைத்தனர். பின்னர் விசாரணையைத் தொடங்கினார்." – என்று ஆரம்பித்து விவரமாக விடயங்களை விவரிக்கின்றது அந்த ஆள்கொணர்வு மனுக்கள்.

ஒரு சட்டத்தரணியாகத் தன் இனத்துக்கும் தனது மக்களுக்கும் ஆற்றிய கடமைக்காக வீட்டுக்குள்ளேயே கைவிலங்கிடப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றார் ஹிஸ்புல்லா.

அவருக்கான ஆள்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்த அதே சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜாதான், 2009 இல் யுத்தத்தின் உச்சக் கட்டம் நெருங்கிய போது, பத்திரிகையாளனான நான் ஆற்றிய பணிக்காகக் கடத்தப்பட்டு, கேவலமான முறையில் கீழ் தரமாக நடத்தப்பட்டு, சித்திர வதைகளை அனுபவித்த போது எனக்காகவும் இதேபோன்று அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

ஹிகாஸின் சார்பிலான மனுவை வாசித்த போது ஒரு நிம்மதி.

என்னைப் போல, நூறுக்கும் அதிகமான குடும்ப நண்பர்கள் முன்னிலையில் பின்னால் கைகள் விலங்கிடப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, உடைகள் கிழித்தெறியப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு தரதரவென்று இழுத்து வாகனத்தில் தூக்கி வீசப்பட்டு அவர் கடத்தப்படவில்லை.

ஆனாலும், தனது சட்ட அலுவலகத்துக்குள்ளேயே கைவிலங்கிடப்பட்ட நிலையில் அவர் எவ்வாறு நடத்தப்பட்டார் என்பது அந்த மனுவை வாசித்த போது நெஞ்சை நெருடியது.

ஒரு விடயம் தெளிவு – இருண்ட யுகம் மீண்டும் ஆரம்பமாகி விட்டது. அதற்குக் கட்டியம் கூறியாகிவிட்டது என்பதுதான் அது.

– மின்னல் –

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் நேற்று வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

சபாநாயகர் என்ற வகையில், நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் நிறைவேற்றுத் துறைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து விளக்கங்கள் கோரி, சமய மற்றும் அரசியல் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், கல்விமான்களும், சிவில் சமூக மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் பொதுமக்களும் என்னைத் தொடர்பு கொண்டனர்.

இலங்கையும் முழு உலகமும் முன்னொருபோதும் இல்லாத வகையில் சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

எதிர்பார்க்கக் கூடிய அரசமைப்புப் பிரச்சினையானது எமது நாட்டின் நிலைமையைத் தேசியளவில் பெரும் கவலைக்குரிய ஒரு விடயமாக மாற்றும் என்பதனால், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் பதிலளிக்காமல் பகிரங்கமாக எனது நிலைப்பாட்டை விளக்குகிறேன்.

2020 மார்ச் 2 ஆம் திகதி ஜனாபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைத்து 2020 ஏப்ரல் 25 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும், புதிய நாடாளுமன்றம் 2020 மே 14 ஆம் திகதி கூட்டப்படவேண்டும் என்றும் பிரகடனம் செய்தார்.

2020 மார்ச் 21 ஆம் திகதி, தேர்தல் ஆணைக்குழு நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 (3) ஆம் பிரிவுக்கு இணங்க தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, இலங்கையில் கொரோனா வைரஸ் பரவிவருவதனால் நாடாளுமன்றத் தேர்தலை 2020 ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்த முடியாது என்று அறிவித்தது.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனம் வெளியிடப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு தினத்தில் அதாவது 2020 ஜூன் 2 ஆம் திகதிக்கு முன் நாடாளுமன்ற கூட்டப்படவேண்டும் என்று அரசமைப்பின் உறுப்புரை 70 (5) (அ) கூறுகின்றது.

2020 மார்ச் 31, 2020 ஏப்ரல் 1, 2020 ஏப்ரல் 6 ஆகிய திகதிகளில் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் ஜனாதிபதியின் செயலாளருக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் மூலம் பின்வருவனவற்றை அறிந்து கொள்ள முடியும்.

முதலாவது, தற்போது காணப்படும் நிலைமையும் ஏற்பட்டுள்ள தடங்கல்களும் 2020 ஜூன் 2 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட்டப்படும் விதத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருக்கின்றன என்பதே தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும்.

ஆனால் அரசோ 2020 மே 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தவிர்க்க முடியாத தடைகள் எதுவும் இல்லை என்று கருதுகின்றது.

உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் இந்த அச்சுறுத்தலுக்கு முகங்கொடுப்பதற்காக அரசியல் பிரச்சினைகளை ஒரு புறம் வைத்துவிட்டு ஐக்கியப்பட்டு வருகின்றன.

இந்த உலகளாவிய தொற்று நோயையும் அதன் பொருளாதாரப் பின்விளைவுகளையும் எதிர்த்துப் போராடுவதற்கான சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதற்கும் சட்டவாக்கத் துறையொன்று காணப்படாத நிலையில் கொரோனா நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் ஒரே ஜனநாயக நாடாக இலங்கை உள்ளது.

அரசும் எதிர்க்கட்சிகளும் தேர்தல் ஆணைக்குழுவுடன் ஒருவருக்கு ஒருவர் அவசரமாகவும் நல்ல நம்பிக்கையுடன் கலந்துரையாடல்களை நடத்தவேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

தேர்தலை உரிய காலத்தில் நடாத்துவதைச் சாத்தியப்படுத்தும் என்று ஆணைக்குழு தீர்மானிக்கும் ஏதேனும் முன்னெச்சரிக்கை கள் அல்லது சட்டங்கள் இருப்பின், அவை தொடர்பில் உடனடியாக ஆராயப்பட வேண்டும்.

தேர்தலை உரிய காலத்தில் நடாத்துவது சாத்தியமில்லாத விடத்து, அரசமைப்புப் பிரச்சினை தோற்றம் பெறுவதை எப்படியாவது தவிர்த்தல் வேண்டும்.

அப்பிரச்சினையின் காரணமாக எமது நாடு சட்டவிரோத நிலைக்கு ஆளாகி ஸ்தம்பிதமடையும் அபாயம் காணப்படுவதுடன் பொருளாதார நிவாரணங்களைப் பெறுவதற்கான இலங்கையின் வாய்ப்புக்களைக் கடுமையாகப் பாதிக்கும்.

தேசத்தின் மீது கொண்டுள்ள அக்கறையின் காரணமாக, எமது நாட்டுக்கு தேவையற்ற மூன்றாவது பிரச்சியொன்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அரசியல் முரண்பாடுளை ஒரு புறம் ஒதுக்கி வைக்குமாறு அரசையும் எதிர்க்கட்சிகளையும் ஏனைய அக்கறையுள்ளோரையும் வேண்டிக் கொள்கிறேன் – என்றுள்ளது.

## அபாயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் காங்கிரஸ், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் சுமுகமான நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்படுமானால், அது சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடைபெறுவதைப் பெரிதும் பாதிக்கும் என்று அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(இச் செய்தியின் முழு விவரம் நேற்றைய மாலை இதழில் இடம்பெற்றிருந்தது.)

## ஊரட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைகளில் வெளி நோயாளர் பிரிவுகள் மற்றும் கிளினிக்குகளின் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கான கிளினிக்குகள் கடுமையான கட்டுப்பாடுகளின் கீழ் தொடர்ந்து செயல்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நாளாந்த ஊடக சந்திப்பிலேயே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க இவற்றைத் தெரிவித்துள்ளார். அரச வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவுகள் மற்றும் கிளினிக்குக ளின் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கிளினிக்குகளில் நோயாளர்களின் நெரிசலைத் தவிர்ப்பதற்காக சிகிச்சையளிக்கும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் மருத்துவர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டார்.

குழந்தைகளுக்கான கிளினிக்குகளுக்கு தந்தையைத் தவிர்த்து தாய் மட்டுமே செல்ல வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொண்டார்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சுவிஸ் போதகரின் ஆராதனையில் பங்கேற்றிய – யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட 30 பேரிடமும் கிளிநொச்சியைச் சேர்ந்த 11 பேரிடமும் மாதிரிகள் பெறப்பட்டு நேற்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்கள் 41 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

## கொட்டாஞ்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் மட்டக்களப்பு, புனானை தனிமைபடுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்.

மற்றையவர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட கொட்டாஞ்சேனைப் பகுதிப் பெண்ணின் 2 ஆவது மகன் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க குறிப்பிட்டார்.

## 244 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 244ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. 77 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

160 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடைசி 24 மணித்தியாலயங்களில் 6 பேர் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஒரு மாதத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்தி கண்காணிக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் கடந்த மார்ச் 17 ஆம் திகதி முதல் ஆரம்பித்தனர். தற்போது அந்த நடவடிக்கைக்கு ஒரு மாதம் பூர்த்தியாகியுள்ளது.

இந்நிலையில், இதுவரை இந்த ஒரு மாதத்தில் 62 ஆயிரம் பேர்வரை சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 39 ஆயிரம் பேர் வரை தற்போது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்துள்ளனர். மேலும் 23 ஆயிரம் பேர் வரை தொடர்ந்து தற்போதும் சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ் கண்காணிப்பில் உள்ளனர் – என்றார்.

## மருந்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் பரவியுள்ள கொரோனா வைரஸ் பரவல் தொற்று நீக்கலுக்கான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை இலங்கை அரசுக்குச் சீனா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த மருந்துப் பொருட்கள், அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் சீனாவின் சைனா ஈஸ்டன் – 231 என்ற இந்த விமானம் நேற்றிரவு 7.00 மணியளவில் கட்டுநாயக்கவை வந்தடைந்தது.

இந்த விமானம் 170 பயணிகளுடன் மீண்டும் சீனாவுக்குப் புறப்பட்டுள்ளது.

## நெடுந்தீவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் அனலைதீவு 4 ஆம் வட்டாரம், ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் உலகநாதன் கடந்த திங்கட்கிழமை கொரோனா தொற்று நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அவர்களின் சகோதரரான சுப்பிரமணியம் ஆனந்தன் நேற்று வியாழக்கிழமை கொரோனா தொற்றிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

பிரித்தானியாவில் தினம் தினம் ஈழத் தமிழர்கள் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்து வருகின்றது தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது

காலைக்கதிர்
Kalaikathir



# அம்பாறை மாவட்டத்தில் கலால் பிரிவு நடவடிக்கை

## ஆறு சந்தேகநபர்கள் கைதாகினர்

கொரோனா வைரஸ் அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக கல்முனை மதுவரி நிலைய பொறுப்பதிகாரி போ.செல்வகுமார் தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நிலையிலும் அதன் பின்னர் அச்சட்டம் அமுலில் உள்ள நிலையிலும் இரு நாள்களாக – அதாவது நேற்று முன்தினமும் நேற்றும் – மதுவரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 6 சந்தேக நபர்கள் கைதாகினர். எதிர்வரும் 20 ஆம் திகதி பல்வேறு நீதிமன்றங்களில் அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன எனக் குறிப்பிட்டார்.

திருக்கோவில் பகுதியில் சட்டவிரோதமாக பியர் போத்தலைத் தம்வசம் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டமையுடன் அதே பகுதியை சேர்ந்த மற்றுமொரு சந்தேக நபரான பெண்ணொருவர் வடிசாரயத்தை தம்வசம் வைத்திருந்த நிலையில் கைதானார்.

மேலும் கல்முனை மதுவரி நிலைய எல்லைக்குட்பட்ட விநாயகபுரம் காயத்திரி கிராமத்தில் சட்டவிரோதமாக வடி சாராயத்தை தம்வசம் வைத்திருந்த மற்றுமொரு பெண் சந்தேக நபர் கைதானார்.

இந்த 3 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர நேற்று முன்தினம் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் கல்முனை சந்தை தொகுதியில் தீர்வையற்ற சட்டவிரோத சிக்கரட்டுக்களை பொது இடத்தில் புகைத்த இருவரை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் எதிராக எதிரவரும் 20 ஆம் திகதி கல்முனை நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது. இத்தேடுதலின் தொடர்ச்சியாக நேற்று நிந்தவூர் அட்டப்பளம் பகுதியில் வடிசாரத்தை தம்வசம் வைத்திருந்த 45 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை மதுவரி திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபரையும் எதிர்வரும் 20 திகதி சம்மாந்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய தேடுதல் நடவடிக்கை மேலும் தொடரவுள்ளதாகவும் பொதுமக்கள் தமது ஒத்துழைப்புகளை வழங்குமாறும் கல்முனை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி போ.செல்வகுமார் குறிப்பிட்டார்.

# நிரபராதி என நிரூபணமாகும் வரையில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை நீதித்துறை சேவையில் அனுமதிக்காதீர்!

## நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிடம் ஞானசார தேரர் கோரிக்கை



சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நிரபராதி என்பது நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்படும் வரை அவர் சட்ட மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பு வலியுறுத்தியிருக்கிறது.

இது குறித்து பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

கடந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவர் குண்டுதாரிகள் இருவருடன் தொடர்புகளைப் பேணினார் எனவும் அவர்களுடன் இணைந்து பல்வேறு அமைப்புக்களிலும் வெவ்வேறு பதவிகளை வகித்தார் எனவும் அதுமாத்திரமன்றி குண்டுத்தாக்குதலை மேற்கொள்வதற்கான திட்டத்திலும் பங்குகொண்டார் எனவும் சந்தேகிப்பதாக கடந்த 15 ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

நபரொருவர் குற்றவாளி என்பது நிரூபணமாகும் வரை அவர் நிரபராதியாகவே கருதப்பட வேண்டும் என்பதை நாமறிவோம். எனினும் இந்த சட்டத்தரணியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் பாரதூரத்தன்மையைக் கருத்திற்கொண்டு விசாரணைகளின் பின்னர் அவர் நிரபராதி என்பது நீதிமன்றத்தினால் உறுசெய்யப்படும் வரையில்அவரை சட்டத்துறையில்பணியாற்றஅனுமதிப்பது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம் எனக் கருதுகின்றோம்.

அது மாத்திரமன்றி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நிரபராதி என்பது நிரூபணமாக முன்னர் அவர் தனது தொழிலில் ஈடுபட அனுமதியளிக்கும் பட்சத்தில் மக்கள் நீதிமன்றத்தின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை இழப்பதற்கும் வாய்ப்புள்ளது. எனவே அவரது குற்றமற்ற தன்மை உறுதியாகும் வரை அவர் சட்ட, நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக மது உடப்பில் ஒருவர் கைது



உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்துளுஓயா பிரதேசத்தில் சட்டவிரோதமாக உள்ளூர் மதுபானம் தயாரித்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கடற்படையினரால், நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பத்துளுஓயா பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினர் அப்பகுதியில் வீடொன்றைசோதனைசெய்தபோதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபானம் 2 லீட்டரும், 37 மதன மோதக பக்கெட்களும் கடற்படையினரால்கைப்பற்றப்பட்டுள்ளன.






நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# விவசாயின் கவலை

யாழ். மாவட்ட விவசாயிகளின் தற்போதைய முக்கிய பிரச்சினை ஒன்றை தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி யாழ். அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

கொரோனாத் தொற்று ஏற்படுத்தியிருக்கும் உலகளாவிய பாதிப்பு அந்தப் பிரச்சினையிலிருந்து உலகம் மீண்ட பின்னரும் நீண்ட காலத்துக்கு எதிரொலிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

அதன் உடனடிப் பிரச்சினைகளில் முக்கியமானது உள்ளூர் உற்பத்திகள் பாதிப்படைதலாகும். தொடர் வாழ்வு ஸ்தம்பித்தால் அதன் விளைவுகளை இரண்டொரு மாதங்களுக்குப் பின்னர் நாடு சந்திக்க வேண்டி வரலாம் எனப் பலரும் அஞ்சுகின்றனர். அரிசி, மரக்கறி வகைகளுக்குக் கூட நாட்டு மக்கள் கடும் பற்றாக்குறையை எதிர்நோக்க வேண்டி வரலாம் என்று அஞ்சப்படுகின்றது.

அதனால்தான் இந்த ஊரடங்கு நெருக்கடிக்குள்ளும் – சமூக இடைவெளியைப் பேணுங்கள் என்ற வற்புறுத்தலுக்கு இடையிலும் – வீட்டுத் தோட்டச் செய்கை குறித்து வலியுறுத்தப்படுகின்றது; ஊக்குவிக்கப்படுகின்றது.

நாட்டின் பிரதமரே தாம் வீட்டில் மனைவியுடன் சேர்ந்து வீட்டுத் தோட்டம் செய்பவர் போல 'போஸ்' கொடுத்து புகைப் படம் பிரசுரிக்கும் அளவுக்கு வீட்டுத்தோட்ட விவகாரம் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் வீட்டுத் தோட்டப் பிரிவுக்குப் பொறுப்பான அலுவலர்கள் விரைந்து களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றார்கள். விவசாயிக்கு மாத்திரம் விசேடமாக ஊரடங்கு அனுமதி வழங்கும் அளவுக்கு பின்னர் ஏற்படக்கூடிய நெருக்கடியின் தாற்பரியம் சகலருக்கும் விளங்கியுள்ளது.

அரசாங்கம் 36 வகையான பயிர்களைச் செய்வதற்கு மிக்க குறைந்த வட்டி வீதத்தில் – வருடத்துக்கு 4 வீதம் என்ற அளவீட்டுடன் – விவசாயிகளுக்கு ஐந்து லட்சம் ரூபா வரை இலகுக் கடன் வழங்கப்படும் என அறிவிக்கின்றது.

அதேநேரம் வீட்டுத்தோட்டம் செய்கைக்காக அதே குறுகிய – சிறிய – வருட வட்டி வீதத்தில் நாற்பதாயிரம் ரூபா வரை கடன் வழங்க முன்வந்திருக்கின்றது அரசு.

இவை எல்லாம் வீட்டுத் தோட்டம் மற்றும் மரக்கறி உட்பட்ட பயிர்ச் செய்கையின் கட்டாயத்தை – அத்தியாவசியத்தை – மக்களுக்கு உணர்த்தி அந்த வழியில் மக்களைத் தூண்டுவதற்கான முன் முயற்சிகளாகும்.

ஆனால் வடக்கில் பெருந்தொகையில் மரக்கறி மற்றும் உப உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்தவர்கள் இந்த விளைச்சல்காலத்தில் அவற்றை சந்தைப்படுத்த முடியாமல் திணறுகின்றனர். உற்பத்தி செய்தும் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி திணறினால் இனி அவனோ, அல்லது அவனது சகாக்களோ அல்லது ஏனைய விவசாயிகளோ அந்தத் துறையை நாடுவார்களா? மக்கள் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபாடு காட்டுவார்களா? – என்று ரெலோ பிரமுகர் சுரேந்திரன் எழுப்புகின்ற கேள்வி முற்றிலும் நியாயமானதுதான்.

தென்னிலங்கையில் இப்படி அபரிமிதமான உற்பத்தியை – சாகுபடியை – பெற்றுக்கொண்ட விவசாயிகளிடமிருந்து அவர்களது உற்பத்திக்கு உரிய வருமானம் பெற்றுக் கொடுக்கும் வேலையை அரசே கவனிக்கின்றது.

மரக்கறி, பழம் கொள்வனவில் ஜனாதிபதியின் செயலணியே நேரடியாக ஈடுபட்டுள்ளது. புத்தாண்டு காலத்திலிருந்து அநுராதபுரம் பதுளை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பண்டாரவளை, வெலிமடை, கெப்பிற்றிக்கொலாவ போன்ற இடங்களில் இருந்து பல லட்சம் கிலோ மரக்கறிகள், ஏனைய உப உணவுப்பொருள்களை ஜனாதிபதி செயலணியேநேரடியாகச் சென்று கொள்முதல் செய்திருக்கின்றது.

போதாக்குறைக்கு அந்த விவசாயிகலிம் உற்பத்திப் பொருள்களை அவரவரது பிரதேசங்களில் இருந்து கொழும்புக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக விசேட ரயில் சேவைகளை நடத்தவும் அரசு தயாராகி வருகின்றது.

ஆனால் யாழ்ப்பாண விவசாயிகள் இப்போது பெருமளவில் உற்பத்தியாகியுள்ள தங்களது உற்பத்திகளை – மரக்கறிகளை – மாட்டுக்குத் தீவனமாகப் கொட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு வந்துள்ளனர்.

அவர்களின் தற்போதைய உற்பத்திகளுக்கு நியாயமான சந்தை வாய்ப்புக் கிட்டாவிட்டால், எதிர்காலத்தில் இங்கு அரிசி அல்லாத பொருள்களின் உற்பத்தியில் விவசாயிகள் நாட்டம் காட்டாத நிலைமை வரும்.

அதைத் தவிர்ப்பதற்கு இப்போதே சரியான நடவடிக்கைகளை அரசுத் தரப்பும், அதிகாரிகளும் விரைந்து முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் அடுத்த தடவை விவசாயம் செய்யப்படாத தரிசு நிலங்களே இங்கு மிஞ்சியிருக்கும்.

# மரக்கறி உள்ளிட்ட யாழ் உற்பத்திகளை வெளியே சந்தைப்படுத்த வழி செய்யுங்கள்!

## யாழ். அரச அதிபரிடம் ரெலோ சுரேந்திரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் உள்ளிட்ட உற்பத்திகளில் யாழ் மாவட்டத்தின் நுகர்ச்சிக்கு மேலதிகமானவற்றை யாழ் மாவட்டத்திற்கு வெளியே எடுத்துச்சென்று விற்பனைசெய்ய அனுமதி வழங்கப்பட வேண்டுமென தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி யாழ்ப்பாண மாவட்ட செயலரிடம் அவசர கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கொரோனாவின் தாக்கத்தினால் முடங்கியுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதார நிலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாங்களும் வேறு பலரும் மக்களை உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்குமாறும் அனைவரையும் தங்களது வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை மேற்கொள்ளுமமாறும் ஊக்கப்படுத்தி வருகின்றோம்.

இந்த நிலையில் உள்ளூர் விவசாயிகள் தமது உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாமல் அவதியுறுகின்றமையுடன் யாழ் மாவட்ட மக்களின் நுகர்ச்சிக்கு மேலதிகமான உற்பத்திகளை வடக்கின் ஏனைய பகுதிகளுக்கோ அல்லது தென்பகுதிக்கோ எடுத்துச் செல்ல முடியாமல் மரக்கறி வகைகள் கால் நடைகளுக்கு போடப்படுவதுடன் தினமும் பெருந்தொகையான உற்பத்திகள் பழுதடைந்து விரயமாகி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக ஊரடங்கு அமுலில் உள்ளமையினால் உள்ளூர் சந்தைகள் செயலிழந்துள்ள நிலையில் மாவட்டத்திற்கு வெளியே எடுத்து செல்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒருசிலருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் ஒருசில இடங்களில் அதுவும் குறைந்த விலையில் விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்து வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்து வருகின்றனர். இதனால் இவர்களால் கொள்வனவு செய்யப்படாத உற்பத்திகள் அழுகி நாசமாகி வருகின்றது.

எனவே மாவட்ட செயலாளர் இவற்றை கருத்திற்கொண்டு விவசாய உற்பத்திகளை மாவட்டத்திற்கு வெளியே எடுத்து செல்வதற்கான அனுமதியினை மேலும் சிலருக்கு வழங்கி உற்பத்திகளை சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்க ஆவனசெய்யும் அதேவேளை உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாமல் தவிக்கும்

விவசாயிகளிடம் அவற்றை கொள்வனவு செய்வதற்கான பொறிமுறை ஒன்றினை உருவாக்கி செயற்படுத்தவும் முன்வரவேண்டும். இவைகள் சாத்தியப்படாதவிடத்து சந்தைப்படுத்தல் வசதிகளின்றி நஷ்டமடையும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கி அவர்களின் வறுமையை போக்கவேண்டும்.

தற்போது இவற்றை நாம் நடைமுறைப் படுத்த தவறின் விவசாயிகள் விரக்தியுற்று தமது விவசாய நடவடிக்கைகளை கைவிடும் நிலைக்கு தள்ளப்படுவர். இதனால் நாம் அனைவரும் வலியுறுத்திவரும் தற்சார்பு பொருளாதாரக் கோட்பாடு வலுவற்றுப்போய் எமது உணவிற்காக நாம் வேறு யாரையும் எதிர்பார்த்திருக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படலாம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமுர்த்தி உத்தியோகத்தருடன் முரண்பட்ட யுவதி நஞ்சருந்தித் தற்கொலைக்கு முயற்சி

## கொடிகாமம் பலாவி பகுதியில் நேற்று சம்பவம்

கிராம மக்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கும் திட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் பாரபட்சம் காட்டினார் என எழுந்த முரண்பாட்டையடுத்து 25 வயதுடைய இளம் குடும்பப் பெண் ஒருவர் நஞ்சு அருந்தி உயிரை மாய்க்க முயற்சித்துள்ளார்.

நஞ்சு அருந்திய அவரை உறவினர்கள் உடனடியாக அழைத்துச் சென்று சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் பலாவி பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:-

தென்மராட்சி பாலாவி பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக உதவிப்பொருள்கள் வழங்கும் செயற்பாடு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இரண்டு குடும்பங்களுக்கு உதவிப்பொருள்களை வழங்க சமுர்த்தி உத்தியோகத்தர் மறுத்துள்ளார். புதிய பதிவு டைய குடும்பங்களுக்கு தற்போது வழங்க முடியாது. ஏனையோருக்கு வழங்கப்பட்ட பின்னரே புதிய பதிவுடையவர்களுக்கு வழங்குவது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் தெரிவித்துள் ளார்.

இதனால் உதவிப்பொருள்கள் வழங்கப்படாத இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், சமுர்த்தி உத்தியோகத்தருடன் முரண்பட்டமையுடன் தாக்குதல் நடத்தவும் முற்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு சமுர்த்தி உத்தியோகத்தரால் முறைப்பாடு வழங்கப்பட்டது. எனினும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இரு தரப்பினரையும் அழைத்து இணக்கமாகச் செல்லுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் அறிவுறுத்தப்பட்டு, அனுப்பிவைக்கப்பட்டனர்.

எனினும் நேற்று வெள்ளிக்கிழமை சமுர்த்தி உத்தியோகத்தர் அந்தப் பகுதிக்குச் சென்று மீளவும் இந்தப் பிரச்சினையை வைத்து, அந்தப் பகுதியைச் சேர்ந்த சமுர்த்தி பயனாளிகளையும் அழைத்து தன்னுடன் முரண்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், தற்போதைய சூழ்நிலையில் மக்களை ஒன்று கூட்ட வேண்டாம் என்று சமுர்த்தி உத்தியோகத்தரைக் கேட்டுக்கொண்டனர்.

எனினும் அவர் உடன்பட மறுத்தார். இதற்கு இடையில் சமுர்த்தி உத்தியோகத்தர் தனக்கு அவமானத்தை ஏற்படுத்துகிறார் என்று குற்றஞ்சாட்டிய 25 வயதுடைய குடும்பப் பெண் நஞ்சு அருந்தி உயிரை மாய்க்க முற்பட்டார்.

அவரை உறவினர்கள் உடனடியாக அழைத்துச் சென்று சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**நாளை**
**19.04.2020**
**ஞாயிற்றுக்கிழமை**
நட்சத்திரம்: .சதயம் காலை 6.40
திதி : துவாதசி பி.இ 02.47 வரை
இராகுகாலம்:04.32 - 06.02
சுப நேரம்:09.02 - 10.32

# சோகத்தைத் தந்துள்ள இளம் தாதியின் மரணம்



பிரித்தானியாவில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துவந்த இளம் கர்ப்பிணி தாதி ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார்.

லண்டன் மாநகரில் இருந்து 35 கி.மீ. வடக்கே யுள்ள லூட்டன் நகரில் உள்ள லூட்டன் அண்ட் டன்ஸ் டபிள் பல்கலைக்கழக வைத்தியசாலையில் கடந்த 5 ஆண்டுகளாக தாதியாக சேவை செய்து வந்தவர், 28 வயதேயான மேரி அகியேவா அகியா போங். இவர் ஆப்பிரிக்க நாடான கானாவை சேர்ந்தவர்.

ஆனாலும் தன் வாழ்வையே இங்கிலாந்தில் என்.எச்.எஸ். என்ற தேசிய சுகாதார பணிகள் துறைக்கு அர்ப்பணித்து விட்டார்.

கர்ப்பத்தின் கடைசி மாதங்களில் கூட இவர் அங்கு 12 ஆவது விடுதியில் இடைவிடாது தனது சேவையைத் தொடர்ந்து வந்தார். இந்த விடுதிதான், அந்த வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தாக்கியவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்து வருகிற விடுதி. மார்ச் 12 ஆம் திகதிவரை அங்கு பணியில் தொடர்ந்து இருந்திருக்கிறார்.

இப்படி கொரோனா வைரஸ் தொற்றுநோயாளிகளுக்காக சேவையாற்றிக் கொண்டிருந்த மேரியையும் கொரோனா வைரஸ் தொற்றிக் கொண்டுள்ளது.

ஏப்ரல் 5 ஆம் திகதி அவருக்கு கொரோனா தொற்றிக் கொண்டது மருத்துவ பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டது.

அடுத்த 2 நாளில் அவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர். முதலில் அவரது உடல்நிலை தேறுவது போல காணப்பட்டது. ஆனால் அடுத்த ஓரிரு நாளிலேயே அவரது நிலை மோசம் அடைந்தது. கொரோனா வைரஸ் தாக்கம் தீவிரமானது.

இந்நிலையில் வைத்தியர்கள் மேரிக்கு அவசர அவசரமாக அறுவை சிகிச்சை செய்து குழந்தையை முதலில் காப்பாற்றி விடுவோம் என கருதினர். அதையே செய்தனர். சிசேரியனில் மேரிக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு மேரி என்றே பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

ஆனால் ஏசுபிரான் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் பண்டிகை நாளில், மேரி உயிரை விட்டிருக்கிறார். இது அவரது குடும்பத்தினருக்கும், உடன் சேவையாற்றி வந்த வைத்தியர்களும் தாதியர்களும் தீராத சோகத்தை தந்திருக்கிறது.

## மகனின் இறுதிச் சடங்கை ஒன்லைனில் பார்த்துக் கதறி அழுத குடும்பத்தினர்!



விமான தடை காரணமாக, கேரளாவில் நடந்த மகனின் இறுதிச் சடங்கை, துபாயில் உள்ள பெற்றோர் ஒன்லைனில் பார்த்துக் கதறி அழுதனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்ஜா நகரில் கேரளாவைச் சேர்ந்த ஒரு தம்பதி வசித்து வந்தனர். இவர் களுக்கு 3 மகன்கள். மூத்த மகன் ஜுவல் ஜி ஜொமெ இங்குள்ள பள்ளியில் 10 ஆம் வகுப்புப் படித்து வந்தான். இவனுக்கு கடந்த 7 ஆண்டுகளாக புற்று நோய்ப் பாதிப்பு இருந்தது. இதற்காக அவன் சிகிச்சை பெற்று வந்தான். இந்நிலையில் உடல் நல குறைவு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் கடந்த 11 ஆம் திகதி அன்று ஜுவல் இறந்தான். பிறந்த நாளுக்கு ஒரு நாள் முன்பு இவன் இறந்த சோகம் நிகழ்ந்தது.

மிகுந்த மனம் உடைந்த சிறுவனது பெற்றோர், அவனது உடலை, கேரளாவில் உள்ள சொந்த ஊரான பத்தனம்திட்டாவில் அடக்கம் செய்ய விரும்பினர். அரசு அதிகாரிகளின் உதவியோடு இவரது உடலை சரக்கு விமானத்தின் மூலம் இந்தியா கொண்டு செல்ல அனுமதி கிடைத்தது. ஆனால் சிறுவனது பெற்றோர் இந்தியா வர அனுமதி கிடைக்கவில்லை. இதனால் சிறுவனது உடல் மட்டும் இந்தியா எடுத்து செல்லப்பட்டு சொந்த ஊரில் இறுதி சடங்கு நடைபெற்றது.

இதனை சார்ஜாவிலிருந்து அவனது குடும்பத்தினர் ஒன்லைன் மூலம் பார்த்துக் கதறி அழுதனர். யூடியுபில் இந்த நேரடி ஒளிபரப்பை ஆயிரக்கணக் கானோர் பார்த்தனர். கொரானா பலரின் வாழ்வியல் சூழலை தலைகீழாக மாற்றி விட்டது.

## டிரம்பின் ஊரடங்கு தளர்வுத் திட்டம்; அமெ. மாநில ஆளுநர்கள் அதிருப்தி

வொஷிங்டன்,ஏப்.18

கொரோனா பாதிப்பால் ஏற்பட்டுள்ள பொருளாதாரத்தை வலுப்படுத்த ஊரடங்கு தளர்வு திட்டத்திற்கு மாநில ஆளுநர்கள் அதிருப்தி தெரிவித்து உள்ளனர்.

கொரோனா பாதிப்பால் அமெரிக்கா உலகிலேயே அதிக உயிரிழப்புகளையும், பாதிப்புகளையும் சந்தித்து வருகிறது. கொரோனா பாதிப்பால் கோடிக்கணக்கான பேர் வேலை இழந்து உள்ளனர். இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முனைப்புக்காட்டி வருகிறார்.

இந்நிலையில், வரும் மாதங்களில் பொருளாதாரங்களை மீட்டெடுப்பது குறித்தும், மூன்று கட்டங்களாக ஊரடங்கை தளர்த்துவது குறித்தும் மாநில ஆளுநர்களுக்கு அதிபர் டிரம்ப் சில வழிகாட்டுதல்களை வழங்கியிருக்கிறார்.

மாநிலங்கள் படிப்படியாக ஊரடங்கைத் தளர்த்திக் கொள்ளலாம் என்றும், மத்திய அரசின் உதவியுடன் அந்தந்த மாநில ஆளுநர்களே இதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளலாம் என்றும் டிரம்ப் உறுதி அளித்துள்ளார்.

அதன்படி அவர், நேற்று 3 கட்ட செயல்திட்டத்தை அறிவித்தார். இது குறித்து பேட்டி அளித்த டிரம்ப் கூறியவை வருமாறு:-

நம்முடைய அடுத்த போர் என்பது, அமெரிக்காவை மீண்டும் பொருளாதாரத்தை சிறந்த பாதையில் கொண்டு செல்வதுதான். அமெரிக்கா முழுவதும் மீண்டும் திறக்கப்பட வேண்டும். அமெரிக்க மக்களும் அதையே விரும்புகிறார்கள்.

நீண்டகாலம் ஊரடங்கு வைத்திருந்தால் மாகாணங்களில் எந்த பயனும் ஏற்படாது. ஊரடங்கால் மக்களின் உடல்நலம், மனநலம் பாதிக்கப்பட்டு உள்ளது. குடும்ப வன்முறைகள், போதைப் பழக்கங்கள்தான் அதிகரிக்கும்.



உடல் ஆரோக்கியமாக இருக்கும் அமெரிக்கர்கள் துணிச்சலாக வெளியே வந்து வேலைக்கு செல்லலாம். அதே சமயம் சமூக விலகலை கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு ஆளுநர்களும் ஊரடங்கு தளர்த்துவது குறித்து வேகமாக முடிவெடுக்க வேண்டும். மூன்று கட்ட திட்டங்கள் மூலம் அமெரிக்க பொருளாதாரம் மீண்டும் இயல்புபாதைக்குக்கொண்டுவரத்திட்டமிட்டுள்ளேன்.

இந்த 3 கட்டங்களிலும் மக்கள் அதிகமாக சுத்தம், சமூக விலகல் சோதனை செய்தல், பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடி தொடர்பில் இருந்தவர்களை கண்டுபிடித்தல் அவசியம் ஆகும்.- எனக் கூறினார்.

ஆனால் பெரும்பாலான மாநில அளுநர்கள் கொரோனா பிடியிலிருந்து முழுமையாக விடுபடாத நிலையில் இவ்வாறு டிரம்ப் திட்டமிடுவதற்கு அதிருப்தி தெரிவித்துள்ளமையோடு அதிகமான பரிசோதனைகள் இன்னும் தேவை என்றும் தெரிவித்துள்ளனர்.

## உலகில் கொரோனா மரணம் ஒன்றரை லட்சத்தை எட்டியது

### இங்கிலாந்தில் 15ஆயிரத்தை நெருங்கியது

லண்டன்,ஏப்.18

இங்கிலாந்தில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாவினால் 847 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

சீனாவின் உகான் நகரில் கடந்த டிசம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் உலகின் 210 நாடுகளுக்குப் பரவி உள்ளது.

தற்போதைய நிலைவரப்படி, உலகம் முழுவதும் 22 லட்சத்து 6 ஆயிரத்து 676 பேருக்கு அது பரவியுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 663 பேர் பலியாகி உள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, ஸ்பெயின் மற்றும் பிரான்ஸைத் தொடர்ந்து தற்போது இங்கிலாந்தில் கொரோனா வைரஸின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

இங்கிலாந்து நாட்டில் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 692 பேருக்கு கொரோனா பரவி உள்ளது. இதனைத்தொடர்ந்து ஊரடங்கு கட்டுப்பாடுகள் இன்னும் மூன்று வாரங்களுக்கு தொடரும் என்று வெளியுறவு செயலாளர் டொமினிக் ராப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இங்கிலாந்தில் கடந்த 24 மணி நேரத்தில் 847 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது. இதனால் இங்கிலாந்தில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை தற்போது 14 ஆயிரத்து 576 ஆக அதிகரித்துள்ளது.

## அதிபட்ச உயிரிழப்புகளைச் சந்தித்து வரும் அமெரிக்கா

வொஷிங்டன்,ஏப்.18

கொரோனாவால் கடந்த 24 மணி நேரத்தில் அமெரிக்கா அதிபட்ச உயிரிழப்புகளைச் சந்தித்து உள்ளது.

நேற்றுக் காலை நிலைவரப்படி அமெரிக்காவில் 6 லட்சத்து 77 ஆயிரத்து 570 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 34 ஆயிரத்து 617 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் அமெரிக்காவில் கொரோனா தொற்றால், 4,491 பேர் பலியாகியுள்ளனரென அறிவிக்கப்பட்டது. இது அந்நாட்டில் கொரோனா வைரஸால் ஒரே நாளில் பலியான அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

உலகிலேயே அதிககொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையை அமெரிக்கா கொண்டுள்ளது.அமெரிக்காவில்677,570க்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. நியூயோர்க் நகரில் மட்டும் இந்த வாரத்தில் 3 ஆயிரத்து 778பேர் உயிரிழந்துள்ளனர். நியூயோர்க் கொரோனா பாதிப்பால் மொத்தம் 12 ஆயிரம் உயிர் இழப்புகளைச் சந்தித்து உள்ளது.



## கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக

# எகிப்து மற்றும் தென்னாபிரிக்க அதிபர்களுடன் மோடி பேச்சு

புதுடெல்லி,ஏப்.18

கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக எகிப்து, தென்னாபிரிக்க அதிபர்களுடன் பிரதமர் மோடி, தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார்.

சீனாவின் உகான் நகரில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலக நாடுகளை உலுக்கி வருகிறது. உலகம் முழுவதும் சுமார் 200 நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் கடும் முயற்சி வருகின்றன.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்பாக தென்னாபிரிக்க அதிபர் சிரில் ராமபோசா மற்றும் எகிப்து அதிபர் அப்தெல் பத்தா எல் – சிசி ஆகியோர் உடன் பிரதமர் மோடி நேற்று ஆலோசனை நடத்தினார்.



"தொலைபேசி மூலம், தென்னாபிரிக்க அதிபர் சிரில் ராமபோசாவுடன் உரையாடியமை குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர் மோடி"அதிபர் சிரில் உடன் கொரோனா பாதிப்பு குறித்துப் பேசினேன். தென்னாபிரிக்காவுக்குத் தேவையான மருத்துவ உதவிகளுக்கு இந்தியா உதவும் என தெரிவித்துள்ளேன் என்றார்.

## ஊரடங்கை மீறியவர்களுக்கு பொலிஸார் நூதன தண்டனை

மகாராஷ்டிராவில் ஊரடங்கை மீறி நடமாடிய சுமார் 200 பேரைப் பிடித்து, சாலையில் 4 மணி நேரத் துக்கும் அதிகமாக அமர வைத்து பொலிஸார் நூதன தண்டனை வழங்கியுள்ளனர்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு தீவிர கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் கட்டுப்பாட்டை மதிக்காமல் சாலைகளில் வாகன ஓட்டிகள், மக்களின் நடமாட்டம் நேற்று அதிகமிருந்தது.

இதையடுத்து சுமார் 200 பேரை மடக்கிய பொலிஸார், சாலையில் 4 மணி நேரத்துக்கும் அதிகமாக சமூக இடைவெளிவிட்டு அமர வைத்து நூதன தண்டனை அளித்தனர்.





## சைக்கிள்களிலும் கால்நடையாகவும் பவனி: சொந்த ஊருக்கு செல்லும் தொழிலாளர்கள்

மகாராஷ்டிரத்தின் பல்வேறு நகரங்களில் பணிபுரிந்த மத்தியப் பிரதேசத் தொழிலாளர்கள் சைக்கிள்களிலும் கால்நடையாகவும் சொந்த ஊருக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர்

ஊரடங்கால் ஆலைகள் மூடப்பட்டுப் போக்குவரத்தும் முடங்கியதால் சொந்த ஊருக்குச் செல்ல முடியாமல் அவர்கள் தவித்து வந்தனர். 21 நாள்கள் பொறுத்திருந்த நிலையில், மேலும் 19 நாள்களுக்கு ஊரடங்கு நீட்டிக்கப்பட்டதால் அவர்கள் பொறுமையிழந்தனர்.

சைக்கிள்களிலும் கால்நடையாகவும் சொந்த ஊரை நோக்கிப் புறப்பட்ட அவர்கள், நாக்பூரைக்கடந்து மத்தியப் பிரதேச எல்லை நோக்கிச் செல்கின்றனர். இன்னும் சில நாள்கள் நடந்தால்தான், சியோனி, சத்னா ஆகிய மாவட்டங்களில் உள்ள தங்கள் சொந்த ஊருக்குச் செல்ல முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

## இந்தியாவில் கொரோனா தொற்றினால் 452 பேர் பலி; 13,835 பேருக்குப் பாதிப்பு

புதுடெல்லி,ஏப்.18

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் மே 3 ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டு உள்ளது.

ஆனாலும், கொரோனா தொற்று அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாளாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்நிலையில், இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 835 ஆக அதிகரித்துள்ளது என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போதைய நிலவரப்படி 13 ஆயிரத்து 835 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 1,766 ஆக உள்ளது. அதேபோல், கொரோனா பாதிப்பால் பலியானோர் எண்ணிக்கை 452 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாவால் 1076 பேர் பாதிப்படைந்துள்ளனர். மேலும் 32 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவித்துள்ளது.

## ஜம்மு காஷ்மீரில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

ஜம்மு காஷ்மீரின் சோபியான் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சோபியானில் உள்ள டாய்ரு பகுதியில் (Dairoo) தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் எனப் பாதுகாப்புப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதன்பேரில் அங்கு பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது, மறைந்திருந்த தீவிரவாதிகள் திடீரென தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது. இந்த சண்டையில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

# இந்தியா மருந்துகளை ஏற்றுமதி செய்கிறது பாக் .பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்கிறது

## பாரத இராணுவத் தளபதி விசனம்

புதுடெல்லி,ஏப் .18

இந்தியா மருந்துகளை ஏற்றுமதி செய்கிறது ஆனால் நமது அண்டை நாடு பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்கிறது என்று இந்திய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் உள்ள எல்லைக்கட்டுப்பாட்டு பகுதியில் பாகிஸ்தான் கடந்த சில தினங்களாக அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த சூழலில், காஷ்மீரில் உள்ள நிலைமை குறித்து ஆய்வு செய்ய இந்திய இராணுவத் தளபதி எம்.எம்.நாரவனே இரண்டு நாள் சுற்றுப்பயணமாக அங்கு சென்றார்.



இந்த நிலையில், ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்திற்கு இந்திய இராணுவத் தளபதி எம்.எம். நாரவனே அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

இந்தியாவும் உலகின் பிற பகுதிகளும் கொரோனா வைரஸ் தொற்றுநோயை எதிர்த்துப் போராடும் நேரத்தில் பாகிஸ்தான் நாடு பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்கிறது.

இந்தியா மருந்துகளை அனுப்பி உலகுக்கே உதவியாக உள்ளது.ஆனால் இன்னொரு பக்கம் பாகிஸ்தான், பயங்கரவாதத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது. இந்த மாதத் தொடக்கத்தில், பயங்கரவாதிகளின் ஊடுருவல் முயற்சி தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் இராணுவத்தின் தீவிர ஆதரவு இல்லாமல் இந்தியாவுக்குள் பயங்கரவாதிகளின் ஊடுருவல்கள் சாத்தியமில்லை. ஒட்டு மொத்த உலகமே ஒரு தொற்றுநோயை எதிர்த்துப் போராடும் போது, நம் அண்டை நாடு தொடர்ந்து நமக்குத் தொல்லைகளைத் தூண்டுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது"-என்றார்.



பனங்காட்டான்

# அரசாங்கம் என்பது மக்களுக்கானதா?

# ஆளும் தரப்பின் கட்சிகளுக்கானதா?

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த பத்தாண்டில் கோட்டாபய தன்னிச்சையாகச் செயற்பட்டு அனுபவப்பட்டவர். இப்போதுள்ள சூழ்நிலையில் அதே அனுபவத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டாது, தேர்தலையும் நடத்தாது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை வீட்டிலேயே இருக்குமாறு கூறிவிட்டுத் தனிநபர் ஆட்சியை நடத்த கோட்டாபய தயங்க மாட்டார். கொரோனா கோட்டாபயவுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை - முழுமையான சந்தர்ப்பத்தை அளிக்கப் போகிறதா?

உலகத்தைச் சுற்றிவளைத்து கட்டிப்பிடித்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொரோனாவும், இந்தக் கொரோனாவைச் சாட்டாக வைத்து அரசியல் விளையாட்டு நடத்தும் இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபயவுமே இக்கட்டுரையை எழுத ஆரம்பிக்கையில் முன்னால் வந்து நிற்கின்றனர்.

மின்னாமல் முழங்காமல் காற்றோடு காற்றாக வந்த கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களை விட, அது எப்போது தங்களுக்குள் புகுந்து விடுமோ என எண்ணி அந்த அச்சத்தால் நித்தம் நித்தம் 'இறந்து' கொண்டிருப்பவர்களே அதிகமாக இருக்கும் போலத் தோன்றுகிறது.

ஐரோப்பிய நாடுகள் எங்கும் பரவிய பின்னர், கொஞ்சம் பிந்தித்தான் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இது வருகை தந்தது. ஒருவகையில் பார்க்கில் உலக மக்கள் பெருமளவில் புலம்பெயர்ந்து இந்த நாடுகளுக்கு வந்ததுபோல கொரோனாவின் வருகையும் அமைந்தது.

முன்னைய ஒரு சினிமாப் பாடல்போல 'சமரசம் உலாவும் இடமாக' உலக முற்றத்தை இது ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

உலகின் ஒரேயொரு வல்லரசு தாமே என்றும், உலகத்தின் பொலிஸ்காரன் தாமே என்றும், சகல நாடுகளுக்கும் தலைவன் தாமே என்றும் சொல்லிக் கொண்டிருந்த அமெரிக்காவே இப்போது கொரோனாவிலும் முதல் இடத்தில் உள்ளது.

இதனை எழுதும்போது உலகில் கொரோனாவால் பீடிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 22 லட்சத்தை நோக்கி விரைகிறது. மரணித்தவர்கள் தொகை ஒன்றரை லட்சத்தைத் தாண்டிவிட்டது.

அமெரிக்காவில் இந்த உபாதைக்குட்பட்டவர்கள் இன்றுவரை ஆறரை லட்சத்துக்கும் அதிகம். மரணித்தவர்கள் முப்பதினாயிரத்தைத் தாண்டிவிட்டனர். நோயின் வேகத்துக்கு போட்டிபோட்டவாறு இறப்ப வர் தொகை விரைகிறது.

நோய்வாய்ப்பட்டவர்கள், மரணித்தவர்கள் தொகையில் அமெரிக்கா முதலிடம் என்றால், இரண்டாமிடத்திலிருந்து ஐந்தாம் இடம்வரை முறையே இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகள் உள்ளன.

> போர்க்காலத்தில் வன்னியில் இரவு – பகலாக பணியாற்றிவிட்டு தற்போது புலம்பெயர்ந்து வாழும் மருத்துவர் ஒருவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், கண் முன்னால் இடம்பெற்ற பாரிய தாக்குதல்களில் உயிருடன் போராடியவர்களுக்குச் சிகிச்சையளித்த தாங்களே இப்போது கண்ணுக்குப் புலப்படாத கிருமிக்குப் பயந்து வாழ வேண்டியுள்ளது என்று கவலையுடன் தெரிவித்தார்.

வெளிநாட்டுக்காரர்களை அதிகம் கொண்ட கனடா இந்த வரிசையில் இப்போது பதின்மூன்றாம் இடத்திலுள்ளது. இங்குள்ள கியுபெக் மாகாணமும் ஒன்ராறியோ மாகாணமும் சுமார் தொள்ளாயிரம் பேரை பலி கொடுத்துவிட்டன. தமிழர்கள் செறிந்து வாழும் இவ்விரு மாகாணங்களிலும் இறப்புத் தொகை கனடாவின் மொத்த எண்ணிக்கையில் (1030) இப்போது 80 வீதத்துக்கு அதிகமாகியுள்ளது.

எந்தவொரு நிகழ்வும் அடுத்த வீட்டிலும் அதற்கு அடுத்த வீட்டிலும் நடைபெறும்போது அதனை ஒரு செய்தியாக பார்ப்பதுதான் மனித வழக்கம். கொடிய போர்க்காலங்களிலும் தங்கள் வீடு தப்பியது என்ற போக்கில் இவ்வாறு பார்த்துப் பழக்கப்பட்டவர்கள் சாதாரண மனிதர்கள்.

ஆனால், அதுவே தங்கள் வீட்டுக்குள் நடைபெறும்போதுதான் அதன் தாக்கத்தை அவர்களால் உணர முடிகிறது. அப்போதுதான் அவர்கள் உண்மை நிலையை உணர்ந்து நிலைமையை அவதானிக்கத் தொடங்குகிறார்கள்.

கடந்த இரண்டு வாரங்களில் ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் கொரோனாவால் மரணத்தைத் தழுவியவர்களில் பலர் தமிழர்கள் என்ற தகவல் இப்போது பரவலாகத் தெரிய வந்துள்ளது. இத்தாலி, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளில் எங்களுக்குத் தெரிந்த பல குடும்பங்கள் தங்கள் குடும்ப உறவுகளை இழந்துள்ளனர். எனினும் உண்மையான இழப்புகளின் எண்ணிக்கை இதுவரை வெளிவரவில்லை.

இந்தவாரத்தில்சுமார்இரண்டு லட்சம் தமிழர்கள் நிறைந்து வாழும் ரொறன்ரோ பெருநகரில் இந்நோய் காரணமாக இரு தம்பதியர் அடுத்தடுத்து மரணத்தைத் தழுவியுள்ளனர். இவர்களில் ஒரு தம்பதியர் முதியோர் பராமரிப்பு இல்லத்தில் வசித்த வர்கள். இவர்களின் மரணச்சடங்குகளில் இறுதி மரியாதை செலுத்துவதற்கு உறவினர்களோ நண் பர்களோ முற்றுமுழுதாக சமுகமளிக்க முடியாத நிலை இங்கு காணப்படுகிறது.

கனடாவில் கொரோனாவினால் இதுவரை மரணித்தவர்களில் சுமார் ஐம்பது வீதமானவர்கள் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வாழ்ந்தவர்கள் என்றும், இன்னும் பலர் ஆபத்தான நிலையில் உள்ளனர் எனவும் கனடாவின் பிரதம மருத்துவ அதிகாரி திரேசா ராம் தெரிவித்துள்ள தகவல் அதிர்ச்சியளிக்கிறது.

எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களையே கொரோனா தாக்குமென்ற உலக சுகாதார நிறுவனத்தின் முன்னைய அறிவிப்பை கனடிய மரணங்கள் நிரூபிப்பவையாக உள்ளன. அதேசமயம் இந்நோய்க்குத் தடுப்பூசி கண்டுபிடிக்காதவரை இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது கடினமென்ற கனடிய பிரதமர் ரூடோவின் அறிவிப்பு மேலும் அச்சமூட்டுவதாக உள்ளது.

போர்க்காலத்தில் வன்னியில் இரவு - பகலாக பணியாற்றிவிட்டு தற்போது புலம்பெயர்ந்து வாழும் மருத்துவர் ஒருவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், கண் முன்னால் இடம்பெற்ற பாரிய தாக்குதல்களில் உயிருடன் போராடியவர்களுக்குச் சிகிச்சையளித்த தாங்களே இப்போது கண்ணுக்குப் புலப்படாத கிருமிக்குப் பயந்து வாழ வேண்டியுள்ளது என்று கவலையுடன் தெரிவித்தார்.

சவர்க்காரம் கொண்டு சுடுநீரில் 20 விநாடிகளுக்குக் கைகளை கழுவினால் இந்நோய்த் தொற்றிலிருந்து காப்பாற்றப்படலாமென்று வெளிவரும் தகவல் சம்பந்தமாக பதிவிட்டுள்ள அன்பரொருவர், பத்து ரூபா பெறுமதியான சவர்க்காரத்தால் கொரோனா வைரசைத் தடுக்க முடியுமென்றால், பலகோடி ரூபா செலவில் குண்டுகளைத் தயாரிக்கும் நாடுகளால் இதற்கு ஏன் மருந்து கண்டுபிடிக்க முடியவில்லையென்று கேள்வி எழுப்பியுள்ளார்.

நியாயமான கேள்விதான்! சர்வதேசத் தலைவர்களையே இக்கிருமி கலைத்துக் கொண்டு திரியும்போது மருந்தைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு ஏது நேரமென்று ஒரு மாற்றுக் கேள்வியைப் போட்டால் எப்படியிருக்கும்?

தமிழீழப் போர்க்காலத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரை அர்த்தமுள்ள ஒரு பாடலை இயற்றியிருந்தார். 'காற்றுப் புக முடியாத இடத்திலும் எங்கள் வீரர் புகுவர்' என்றவாறு அந்த வரிகள் அமைந்திருந்தன. கொரோனா வைரஸும் அந்த வீரர்கள் போலவே தெரிகிறது.

கட்டிய மனைவியைக் கட்டிப்பிடித்து புரண்ட கட்டிலில் படுக்கவே பயமாக இருக்கிறது. அதில் கொரோனா இருக்குமோ எனப் பயப்படுகிறார் யதார்த்தமாகச் சிந்திக்கும் குடும்பத் தலைவர் ஒருவர்.

அண்மையில், இரண்டு முக்கியமான செய்திகளை தமிழக இதழ்களில் படிக்க முடிந்தது. இமய மலைச் சிகரத்தை எந்தத் தடங்கலும் இல்லாமல் பார்க்க முடிகிறது. பளிச்சென்று வெள்ளிக் கோபுரமாக அது காட்சியளிப்பதாக ஒரு செய்தி கூறிற்று.

இந்தியாவில் கரைபுரண்டு ஓடும் நதிகளும் ஆறுகளும் பளிங்குபோல காட்சி தருகின்றன. சுத்தமான அந்த நீரை அள்ளிக் குடிக்க வேண்டும்போல் இருப்பதாக தெரிவித்தது மற்றைய செய்தி.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 04 - 1918



மறைவு 17 - 04 - 2020

சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## வேலுப்பிள்ளை நாகலிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத சாரதி)

இன்று தனது 102ஆவது வயதில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர் களான முருகேசு, நாகம்மாவின் பாசமிகு சகோதரனும், திருமதி சற்குண சறோஜினி (ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர் - வலி வடக்கு பிரதேச சபை), காலஞ்சென்ற ரவி (சீமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அருமை நாயகத்தின் (ஆயுள் வேத வைத்தியர்), பாசமிகு மாமனாரும் Dr. அ.ஜெயகுமரன் (சுகாதார வைத்திய அதிகாரி - நல்லூர்), திருமதி. நித்யா (தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் சரண்யனின் (மாணவன் - யாழ் இந்துக் கல்லூரி) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.04.2020 - வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தொலைபேசி -
077 371 5955
021 224 0088

தகவல் -
Dr. அ. ஜெயகுமரன் (பேரன்)

# அரசாங்கம் என்பது .....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளிமண்டலம் மாசுபடாது இருப்பதே இதற்குக் காரணம். வான்வெளியில் விமானங்கள் பறக்கவில்லை. வீதிகளில் வாகனங்கள் ஓடவில்லை. கரிய புகை கக்கும் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. இதுவே வளிமண்டலம் தூய்மையாக இருப்பதற்குக் காரணமென்று விளக்கிக் கூறின இச்செய்திகள்.

தீமைகள் மத்தியில் நல்லவையும் நடைபெறலாமென்று சொல்வது உண்மைதான். ஆனால் இந்த நன்மையை அனுபவிக்க விடாது மக்களை வீட்டுக்குள் முடக்கி தனிமைப்படுத்தி வைத்திருக்கிறது கொரோனா வைரஸ்!

இலங்கைத் தலைநகரிலும் பல வீதிகள் வாகனப் போக்குவரத்தின்மையால் சுத்தமாகவும் அழகாகவும் காட்சியளிப்பதாக அங்கிருந்து வரும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இதுவும் உண்மைதான்.ஆனால்கொரோனாவை கோட்டாபய ஆட்சித்தரப்பு எவ்வாறு தமக்குச் சாதகமாக்கி காய்களை நகர்த்துகிறது என்பதை இந்த ஊடகங்கள் வெளிப்படுத்த மாட்டா. இவற்றின் முதலாளிகள் பெரும்பான்மை இனத்தவர் என்று சொல்லும் சிங்களவர்களாக இருப்பதே இதன் காரணம்.

கொரோனாவை முன்னிறுத்தி ராஜபக்ஷகுடும்பத்தின் ஒவ்வொருவரும் தனியாகவும் கூட்டாகவும் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் சர்வாதிகார எதேச்சாதிகாரமாக உள்ளது.

எல்லா நடவடிக்கைகளும் படையினர் வசமாக்கப்பட்டுவிட்டன. கொரோனாச் செயலணியின் தலைவராக ராணுவத் தளபதி சவேந்திர சில்வா இயங்குகிறார். இதன் ஆலோசனைக் குழுத்தலைவர் பஸில் ராஜபக்ஷ.

மக்களுக்கான நிவாரண அட்டவணைகளைத் தயாரித்தவர்கள் கிராம சேவகர்கள். ஆனால் தாயக மண்ணில் இவர்களுக்கு உத்தரவிடுபவர்கள் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிகள். இதனால் தமிழ் பேசும் கிராம சேவகர்கள் அதிருப்தியும் விரக்தியும் கொண்டுள்ளனர். நாடு முழுவதும் ஐயாயிரம் ரூபா நிவாரணம் வழங்கும் பணி சவேந்திர சில்வாவின் பணிப்புக்கிணங்க சமுத்தி உத்தியோகஸ்தர்களின் கைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. அந்தந்தப் பிரதேச பொதுஜன பெரமுன (மஹிந்தவின் கட்சி) பிரமுகர்கள் கையளிக்கும் பெயர்களுக்கே நிவாரணம் கிடைக்கிறது.

அரசாங்க செலவில் வழங்கப்படும் உலர் உணவுப் பொதிகளில் பொதுஜன பெரமுனவின் பெயர் பொறிக்கப்பட்டி ருக்கிறது. அரச நிதியை ஆளும் தரப்புக் கட்சியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாமா? கேட்பதற்கு யாருமில்லை.

வடக்கில் மேலும் சில தனிப்படுத்தல் முகாம்களை அமைக்கவும், பயன்படுத்தப்படாதிருக்கும் வயற்காணிகளையும் விவசாய நிலங்களையும் கையகப்படுத்தவும் சவேந்திர சில்வா கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும்விஜயம்மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவும் அங்கு சென்றார். இவர்கள் இருவரும் இலங்கையின் போர்க்குற்றவாளிகள். ஆனால் கோட்டாபயவின் ஆட்சியின் அரசியல் பீடத்தை அலங்கரிப்பவர்கள்.

விரைவில் வடக்கில் பல நூறு ஏக்கர் காணிகள் இராணுவ வசமாகி அவர்கள் பணமீட்ட உதவுமானால் ஆச்சரியப்பட நேராது. போர்க்காலத்தில் அபகரித்த காணிகளிலிருந்து எஞ்சியவைகளை அபகரிக்க கொரோனா காலத்தை கோட்டாபய பயன்படுத்துகிறார்.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களினதும் ஆளுநர்களாக ஓய்வு பெற்ற ரைாணுவ மேஜர் ஜெனரல்களையும், மாவட்டச் செயலாளர்களாக (அரசாங்க அதிபர்கள்) ஓய்வு பெற்றிராணுவ பிரிகேடியர்களையும் நியமிக்குமாறு மஹிந்தவின் பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளின் விருப்பத்தை நிறைவேற்றினேன் என்று கூறிக் கொண்டு கோட்டாபய இந்த வேண்டுகோளை நிறைவேற்ற முன்வரலாம். போர்க்குற்றவாளிகளான பல ரைாணுவ அதிகாரிகள் அவரின் கூடாரத்துள் இருக்கும்போது ஆள் பஞ்சம் கிடையாதே.

இலங்கையின் அடுத்த நாடாளுமன்ற தேர்தல் எப்போது என்ற கேள்வி எழுகிறது. ஐந்து வருட ஆட்சி முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்ததால், ஜூன் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

கொரோனா ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையில் தேர்தலை நடத்த முடியாதென்று கூறும் எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு வேண்டுகின்றன. தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை மறுத்து வருகிறார் கோட்டாபய. இதற்கு ஒத்தூதுகின்றன மஹிந்தவின் கூட்டணியினர்.

தேர்தலை நடத்தும் முடிவு தேர்தல் ஆணையாளருடையதா? சட்டமா அதிபருடையதா? ஜனாதிபதி கோட்டாபாயவினுடையதா என்ற மும்முனைப் போட்டி எழுகிறது. இந்த அதிகாரம் கோட்டாபயவுக்கே உண்டென்கிறது பொதுஜன பெரமுன கூட்டணி. சிவில் அமைப்புகள் அதனை மறுதலித்து வருகின்றன.

இந்தப் போட்டி தொடருமானால் நாடாளுமன்றத்தைக் கூட்டாது, தேர்தலையும் நடத்தாது முன்னாள் உறுப்பினர்களை வீட்டிலேயே இருக்குமாறு கூறிவிட்டு தனிநபர் ஆட்சியை நடத்த கோட்டாபய தயங்க மாட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த பத்தாண்டில் கோட்டாபய தன்னிச்சையாகச் செயற்பட்டு அனுபவப் பட்டவர். இப்போது கொரோனா கோட்டாபயவுக்கு இன்னொரு வாய்ப்பை - முழுமையான சந்தர்ப்பத்தை அளிக்கப் போகிறது.

அரசாங்கம் என்பது மக்களுக்கானதா? அல்லது ஆளும் தரப்பின் கட்சிகளுக்கானதா? இதற்கு கொரோனா பதில் சொல்லுமா?

நன்றி: - 'பதிவு' இணையத்தளம்

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

## தமிழ்க் கட்சியின் உள்ளூர்ப் பிரமுகர் ஓமந்தையில் கசிப்புடன் சிக்கினார்!

வவுனியா ஓமந்தை பகுதியில் தமிழ்க்கட்சி ஒன்றின் பிரதேச மட்ட முக்கியஸ்தர் ஒருவரை பொலிஸார் கசிப்புடன் கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. இரகசிய தகவலின் அடிப்படையில் வாகனத்தை மறித்த ஓமந்தை பொலிஸார் அதனை சோதனைக்குட்படுத்திய சமயத் திலேயே இவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

அந்த வாகனத்திலிருந்து 1500 மில்லிலீற்றர் கசிப்பைப் பொலிஸார் கைப்பற் றினர். கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டில் வாகனத்தின் சாரதியான ஓமந்தை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய மேற்படி கட்சியின் பிரதேச மட்ட முக்கியஸ்தரையும் கைது செய்தமையுடன் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கசிப்புடன் அந்த நபரை வவுனியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்திய சமயத்தில் அவரைப் பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

## ஓடு பிரித்து வீட்டுக்குள் இறங்கிய திருடன் வசமாகச் சிக்கினான்!

### வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் சம்பவம்

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வீட்டின் கூரையை கழற்றி வீட்டுக்குள் இறங்கிய திருடனை இளைஞர்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.30மணியளவில் உக்குளாங்குளம் சிவன்கோயில் சந்தியில் உள்ள வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலரின் வீட்டில் இடம்பெற்றது.

வீட்டில் இருந்தவர்கள் உறங்கிக்கொண்டு இருந்த போது, வீட்டு வளவுக்குள் நுழைந்த திருடன் குறித்த வீட்டில் உள்ள மரம் ஒன்றின் மேல் ஏறி வீட்டின் கூரையை கழற்றி அதன் வழியாக வீட்டுக்குள் இறங்கியுள்ளான்.

இதனை அவதானித்த வீட்டின் உரிமையாளர் கூச்சலிட்டும், தொலைபேசி மூலமாகவும் அப்பகுதி இளைஞர்களை உதவிக்கு அழைத்துள்ளார்.

விரைந்து செயல்பட்ட இளைஞர்கள் திருடனை மடக்கிப்பிடித்து மரத்தில் கட்டி வைத்தமையுடன், உடனடியாக பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்தபண்டாரிக்குளம்பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் தலைமையிலான பொலிஸார், வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியமையையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார் திருடனை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது

## ஆற்றில் மிதந்த சடலம்

மஹலதுவ பகுதியை ஊடறுத்து செல்லும் மாதுகங்கையில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் மிதந்ததை அவதானித்த விடுதி ஒன்றின் முகாமையாளர் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பலபிட்டி பகுதியை சேர்ந்த 41வயதுடைய ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அஹுங்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயினுடன் ஹட்டனில் மூவர் சிக்கினர்

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த மூவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என ஹட்டன் கலால் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் மாலை கினிகத்தேனை நகரில் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே 950 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் வழக்கு பதிவு செய்து ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் தாங்கள் ஆஜர்படுத்தவுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

தலைமை காரியாலயம், இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484


கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012



படம் 1




படம் 2

# தினம் ஒரு தலைப்பு
# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

**படம் 1**
தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**படம் 2**
அக்ஷா கீர்த்திராஜ் - தரம் 4
ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு- ‘ஆகாய விமானம்’

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘விளம்பரப் பலகை’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்ப்பப் பாடசாலை

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயாணு - தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

தவேந்திரன் ஆஹர்ன் - தரம் 2
யா/ நெல்லியடி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

எஸ். அக்சன்யா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - தரம் - 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எவ். ஹுமைரா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். ஐ. எம். அயான் - தரம் 1
பு/ மதவாக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். நஸீம் - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

பாசனா ஹர்ன் - தரம் 7
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

பரணீதரன் அபிராம் - தரம் 4
யாழ். பரியோவான் கல்லூரி

பிரபாகர் அபிஜித் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ஏ. ஆர். முஹம்மட் றிஸ்னி - தரம் 4
கமு/ சது அல் மனார் வித்தியாலயம் - சம்மாந்துறை

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

இ. சிந்துாரிகா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

த. ஆருசன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிர மணிய வித்தியாலயம்

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் -தரம்8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

ஆகாய விமானம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

**இன்று (18/04/2020) தலைப்பு**
**ஆகாய விமானம்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# ஆயுர்வேத மருந்துப் பொடி கையளிப்பு



கொரோனா தொற்றிலிருந்து தற்பாது காப்புப் பெறுவதற்காக, ஆயுர்வேத மருந்து பொடி வழங்கும் நிகழ்வு, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.மொஹொமட் கனி தலைமையில், நேற்று பிரதேச செயலகத்தில் வைத்து இடம்பெற்றது.

ஆயுர்வேத மாவட்ட வைத்தியர் எம். மாஸாத் தலைமையிலான வைத்திய குழுவினர், மேற்படி மருத்துவ பொடியை பிரதேச செயலாளிடம்கையளித்தமையைதொடர்ந்து, பிரதேச செயலாளரால் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.



Free Online Seminar!
Android App Development for KIDS!
பாடசாலை மாணவர்களுக்கானது!
10 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2 மணிநேர இலவச செயலமர்வு!
இந்தியா - தமிழ்நாட்டின் Robatics கற்பித்தலில் புகழ்பெற்ற நிறுவனமான OTOMATIKS நிறுவனத்தினால் நேரடியாக நாடாத்தப்படும் இலவச செயலமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 4 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது.
இந்த செயலமர்வில் உங்கள் வீட்டுப் பிள்ளைகளும் கலந்து பயன்பெற விரும்பினால் கீழுள்ள விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கீழே உள்ள இலக்கத்திற்கு What's app செய்யவும்.
https://docs.google.com/forms/d/1wd7yrGJirLdmqhnSWgT5QlejVsApHOGK9ccGPp37FXs
(தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்கைநெறிகள் நடைபெறும். உலகின் எந்தப் பாகத்தில் இருந்தும் கலந்துகொள்ளலாம். முழுமையான இணையவழி கற்கைநெறி 30 மணிநேரம் - விருப்பம் உள்ளவர்கள் கட்டணம் கட்டி முழுமையான பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம் -சான்றிதழ் வழங்கபடும்)
முதலில் பதிவுசெய்யும் 250 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி!
மேலதிக விபரங்களுக்கு: 076 817 0077
அனுசரணை: கற்பகவனம், காலைக்கதிர் பத்திரிகை

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
021 222 3536
இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.
நெல்லியடியில் — இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576
சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.04.2020 இல் வெளியிடப்பெற்றது.